# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 07.04.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 4274/F/2024**

திரு.கோ.அய்யாவு .. புகார்தாரர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம் (கி.ஊ),
சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.கோ.அய்யாவு அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுதகவல் அலுவலர் திரு.S.மணி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர், சின்னசேலம், கள்ளக்குறிச்சி அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 05/07/2024 தேதியிட்டு தாக்கல் செய்த மனுவில் கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், நல்லாத்தூர் கிராம பட்டா எண்கள்.1543, 1582 மற்றும் அதன் சர்வே எண்கள் 170/3A. 170/5 ஆகியவற்றில் வீட்டுமனைப் பிரிவுகள் அமைப்பதற்காக வழங்கப்பட்ட வரைபடத்துடன் கூடிய திட்ட அனுமதி மற்றும் அங்கீகாரத்தைக் காட்டும் அனைத்து

ஆவணங்களின் ஒளி நகல்கள் என்பன போன்ற 5 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை. மனுதாரர் தனக்கு பொதுதகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம், பிரிவு 18(1)ன் கீழ் 27.08.2024 நாளிட்ட புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து ந.க.எண். ஆ5/689/2023, நாள் 06.04.2026 தேதியிட்ட கடிதம் மூலம் இனம் வாரியாக தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி ஆவணங்களை ஆணையத்தின் பார்வைக்கு சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் இவ்வாணையம் கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

- **மனுதாரரின் 05.07.2024 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், திரு.கார்த்தி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) (பொறுப்பு), வட்டார வளர்ச்சி அலுவலகம் (கி.ஊ), சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களுக்கு சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ.25000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை 12.05.2026 அன்று திரு.கார்த்தி, அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

- **மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கும் சரியான முழுமையான தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 7(6)ன் கீழ் கட்டணம் ஏதுமின்றி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது என்ற முத்திரையுடன் பொதுத்தகவல் அலுவலர் கையொப்பமிட்டு மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் மனுதாரருக்கு வழங்கிய தகவல் ஆகியவற்றை**

**இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் 12.05.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4274/F/2024</u>**
பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம் (கி.ஊ),
சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

**<u>திரு.கார்த்தி,</u>**
**<u>(அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்),</u>**
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம் (கி.ஊ),
சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.
**<u>(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)</u>**

**<u>புகார்தாரர்:-</u>**

திரு.கோ.அய்யாவு,
23, மாரியம்மன் கோயில் தெரு,
கச்சிராயப்பாளையம்-606 207,
கள்ளக்குறிச்சி மாவட்டம்

Copy to file: KR/PA